# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஜூன் 17, 2017

Weekly E-paper ● June 17, 2017


# தலைவிரித்தாடும் தன்னல அரசியல்

சுப. வீரபாண்டியன்

தமிழகத்தின் ஆளும் கட்சியான அதிமுக மூன்று, நான்கு அணிகளாகப் பிரிந்து கிடக்கின்றது என்றே இன்று பலரும் கருதுகின்றனர். அவை அணிகளாக இல்லை, கட்சிகளாகவே பிரிந்து விட்டன என்பதே உண்மை. பன்னீர்செல்வம், பழனிச்சாமி, தீபா ஆகியோரின் தலைமையில் இன்று மூன்று கட்சிகள் உள்ளன. வேண்டுமானால், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் உள்ள ஒரு கட்சி, எடப்பாடி அணி, தினகரன் அணி என்று இரண்டாகப் பிரிந்துள்ளது என்று கூறலாம்.

இவை அனைத்தையும், தில்லியிலிருந்து பாஜக இயக்குகிறது என்னும் உண்மை அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால் இந்த உண்மையை இரு கட்சிகளும் மறுத்து வந்தன. இப்போது, ஓர் ஆங்கில நாளேட்டிற்கு (The Times of India, Chennai ed., 14th June 2017) பன்னீர்செல்வம் அளித்துள்ள நேர்காணலில் எல்லா உண்மைகளும் வெட்ட வெளிச்சமாகி உள்ளன.

நீங்கள் பிரதமர் மோடியைச் சந்தித்தபோது, அவர் உங்களிடம் என்ன கூறினார் என்னும் வினாவிற்கு, பன்னீர்செல்வம் தந்துள்ள விடை இதுதான்:

"நிலையான அரசைத் தரும் வகையில், இரண்டு அணிகளும் இணைந்து, ஒரு கட்சியாக இயங்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். மிக முக்கியமாக, ஊழலற்ற அரசாக இருக்க வேண்டும் என்ற கருத்தை எங்களிடம் கூறினார். நிலைமை எப்படியிருந்தாலும், அரசு நிர்வாகத்தில் ஊழல் இருக்கக்கூடாது என்பதிலும், அதனைத் தான் அனுமதிக்க மாட்டேன் என்பதிலும் அவர் மிகத் தெளிவாக உள்ளார். அதில் அவர் உறுதியாக உள்ளார்."

இதற்கு மேல் இங்குள்ள அதிமுக கட்சிகளை யார் இயக்குகிறார்கள் என்பதை ஆராயத் தேவையில்லை. இரண்டு நாள்களுக்கு முன், பேச்சுவார்த்தைக்கான குழுவையே கலைத்து விட்டதாகவும், இனி இணைப்புக்கு இடமில்லை என்றும் பேசிய பன்னீர்செல்வம், இப்போது மோடியின் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கே அதிமுக இணைந்து செயல்படுவதில் மோடிக்கு அப்படியென்ன அக்கறை? எந்த ஒரு கட்சியும் தான் ஆட்சிக்கு வரவேண்டும்





என்று கருதுமே தவிர, அடுத்த கட்சியை வலுப்படுத்துவதில் ஆர்வம் காட்டாது. ஆனால் மோடி அப்படி ஆர்வம் காட்டுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, பாஜக ஒருநாளும் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரமுடியாது என்பது. எனவே அந்த முயற்சியில் ஈடுபடுவது வீண் வேலை என்பதை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர். இரண்டாவது, இப்போது ஆட்சி கவிழ்ந்து, தேர்தல் வருமானால், திமுக மாபெரும் வெற்றி பெற்றுவிடும் என்பது வெளிப்படையான உண்மை. அதனை பாஜக ஒருநாளும் விரும்பாது.

பாஜக மட்டுமின்றி, சமூக நீதி, திராவிட இயக்கம் ஆகியனவற்றை முழுமையாக வெறுக்கும் எவரும் திமுக ஆட்சிக்கு வருவதை விரும்ப மாட்டார்கள். அதனால்தான், ரஜினியைக் கொண்டுவந்து வாக்குகளைப் பிரித்தோ, அல்லது வேறு வழியிலோ அந்த நிலை ஏற்பட்டுவிடாமல் பார்த்துக் கொள்வதில் சிலர் முனைப்பாக உள்ளனர்.

பன்னீர்செல்வம், எடப்பாடி தலைமையிலான கட்சிகளுக்கும், தினகரன் தலைமையிலான அணிக்கும் பணம், பதவி இரண்டையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.எனவே, அவர்களும் சட்டமன்றத்திற்கு வெளியே முட்டி மோதிச் சண்டை போட்டுக் கொள்வார்களே தவிர, சட்டமன்றத்திற்குள், ஆடாமல், அசையாமல் வெறும் பொம்மைகளாக அமர்ந்திருப்பார்கள்.

தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் தன்னலம் மிக்க அதிமுக அரசு நாட்டை ஆள்வதும், அதற்கு மதவாதக் கட்சியான பாஜக துணை போவதும் வெட்கக்கேடானது!●

## கீழடி ஆய்வுக் கருத்தரங்கம்

நாள் : 22.06.2017 வியாழன் மாலை 6 மணி

இடம் : கவிக்கோ அரங்கம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை

தலைமை : தோழர் சுப. வீரபாண்டியன் (பொதுச்செயலாளர், தி.இ.த. பேரவை)

கருத்துரை : எழுத்தாளர் சு.வெங்கடேசன் (பொதுச்செயலாளர், த.மு.எ.க.ச) திரு சொ. சாந்தலிங்கம் (தொல்லியல் ஆய்வாளர்)

தமிழினத்தின் இன்னொரு சிந்து சமவெளி நாகரிகம் கீழடி!

அனைவரும் வருக!

அன்புடன் அழைக்கும்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## தோழர் சுபவீ பங்கேற்ற தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழாக்கள்



கோலார் தங்கவயல், கர்நாடகம் (11.06.2017)



வாலாஜாபாத், காஞ்சி மாவட்டம் (12.06.2017)



மவுலிவாக்கம், சென்னை (09.06.2017)




விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் (13.06.2017)

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## கத்தியின் கூரிய முனை



**ம**தத்தை அபினுக்கு ஒப்பிட்டார் காரல் மார்க்ஸ்.

அபினைப் போன்று மதம் மயக்கத்தைத் தரும், மதியிழக்கச் செய்யும், அமைதியைக் குலைக்கும், வன்முறைக்கு வழி கோலும்.

அதுதான் இன்று நடந்து கொண்டு இருக்கிறது.

சமஸ்கிருதத்தை முன்னிறுத்தி மதவாத அரசியல் விளையாட்டில் தீவிரம் காட்டுகிறது பா.ஜ.க.வின் அரசு.

மாட்டுக் கறி சாப்பிடத் தடை என்கிறது மோடி அரசு. மாட்டுக் கறியை விட பன்றிக்கறி சாப்பிடலாம் என்கிறார் அர்ஜூன் சம்பத்.

மாட்டுக்கறியை விட நாய்க்கறி நன்றாக இருக்கும் என்கிறார் எச்.ராஜா.

மாட்டுக்கறியை விட மலம் சாப்பிடலாம் என்கிறார் இராம. கோபாலன் இவையெல்லாம் மதவாத அரசியலில் வன்முறையைத் தூண்டுவதாகவே இருக்கிறது.

மாணவர்கள் அரசியலில் இறங்கக் கூடாது என்கிறார் ஒரு பா.ஜ.க. தலைவர். அப்படி என்றால் அவர்களின் ஏ.பி.வி.பி. மாணவர் அமைப்பை இந்நேரம் கலைத்திருக்க வேண்டாமா?

அன்மையில் மாட்டிறைச்சி சாப்பிடத் தடை குறித்துக் கலந்து பேச சென்னை ஐ.ஐ.டி. வளாக இமாலய லான்ஸ் பகுதியில் மாணவர்கள் கூடினார்கள். அங்கே கொடுக்கப்பட்ட மாட்டுக்கறி விருந்தில் கலந்து கொண்டதற்காக மாணவர் சூரஜ் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து இதுவரை காவல் துறை முதல் தகவல் அறிக்கை கூடப் பதிவு செய்யவில்லை.

சூரஜ் மாட்டுக்கறி சாப்பிடதற்காக அவரின் தனி உரிமைக்கு எதிராக, அவர் மீது தாக்குதல் நடத்திய மணீஸ் குமார் மீது இதுவரை ஐ.ஐ.டி. நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது நீதிமன்றத்தில் வழக்காக இப்பொழுது இருக்கிறது.

வட இந்திய ஐ.ஐ.டி.களிலும் இதுபோன்று நிகழ்ந்துள்ளன, இனி நிகழும் என்ற கூட எதிர்பாக்க வேண்டி இருக்கிறது. இவையெல்லாம் மதவாத அரசியல் விளையாட்டு.

மசூதி இடிப்பு, மாட்டிறைச்சி, சமஸ்கிருதம், தனிமனிதத் தாக்குதல் என்று மதவாத அச்ச உணர்வை வளர்க்கும் பா.ஜ.க. அரசு, அப்பொழுது அதை ஐ.ஐ.டி. மூலம் மாணவர்கள் மத்தியிலும் கொண்டு செல்வதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது, அது ஆபத்தில் தான் முடியும்.

இந்தியா காவிமயமாகிக் கொண்டிருக்கிறது என்கிறார் அமித்ஷா.

இந்தியா காவிமயமாக வேண்டும் என்கிறார் பொன். ராதாகிருஷ்ணன்.

இந்தியாவில் தமிழ்நாடு மட்டும் தான் காவிமயமாக வேண்டும் என்கிறார் தமிழிசை சௌந்தர்ராஜன்.

கத்தியின் கூரிய முனை எதிரியை மட்டும்தான் குறி வைக்கும் என்று எண்ணிவிடக் கூடாது.

தன்னையும் அது தாக்கிவிடும்.

மதமும் அப்படித் தான், அது ஒரு அபின்.

# பாரதிராஜாவின் ‘அரசியல்’ புரிதல்

**சுபவீ**

ஒரு துறையில் வல்லுனர்களாக இருப்பவர்கள் பிற துறைகளைப் பற்றிப் பேசக்கூடாது என்பதில்லை. ஆனால் அப்படிப் பேசும்போது கூடுதல் கவனத்தோடு இருப்பது நல்லது. பாரதிராஜா, இளையராஜா போன்றவர்களிடம் அந்த நிதானம் தவறிப் போவதைப் பலமுறை பார்த்திருக்கிறோம். இப்போது மீண்டும் ஒருமுறை அது நிகழ்ந்துள்ளது.

கடந்த வாரம், ஆனந்த விகடனுக்கு அளித்துள்ள நேர்காணலில் பாரதிராஜா அரசியல் குறித்தும், தேசிய இனப் பிரச்சினை குறித்தும் பேசியுள்ளார். "ரஜினியின் பாதம் நல்ல பாதம். புல்வெளியில் நடக்க, பூக்களின் தோட்டத்தில் இருந்திருக்க, மக்கள் வெள்ளத்தில் மிதந்து வந்திருக்க அவற்றைப் பயன்படுத்த வேண்டும்." அதை விட்டுவிட்டு, இந்த சாக்கடைக்குள் (அரசியலுக்குள்) ஏன் காலை விட வேண்டும் என்று கேட்கிறார். அது மட்டுமல்லாமல், அரசியலில் நுழைந்து விட்டாலே, எந்த ஒரு நல்ல மனிதனும் கெட்டுப் போய்விடுவான் என்கிறார்.

இவ்வாறெல்லாம் அரசியல் குறித்துச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உள்ளது. ஆனாலும் சில செய்திகளை அவர் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். அரசியலைத் தவிர நாட்டில் மற்ற துறைகள் எல்லாமே சரியாக இருக்கின்றனவா? திரைப்படத் துறையில்



கெட்டவர்களே இல்லையா? ஒழுக்கக் குறைபாடு, கறுப்புப்பணம் பற்றியெல்லாம் திரைப்படத் துறையிலோ, வேறு துறையிலோ உள்ளவர்களுக்குத் தெரியவே தெரியாதா?

புல்வெளியில் மட்டுமே நடக்கக்கூடிய பாதங்கள் கரடு முரடான பாதையில் நடக்க வேண்டுமா என்று கேட்பது வேறு, சாக்கடையில் நடக்க வேண்டுமா என்று கேட்பது வேறு.

பெரியார், கருணாநிதி, வைகோ இவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லை என்று சீமான் கூறுகின்றாரே, அது பற்றி உங்கள் கருத்து என்ன என்று இன்னொரு வினா கேட்டுள்ளனர். சுற்றி வளைத்து விடை சொல்லும் அவர், இறுதியில், "சீமான் சொல்வதில் தவறே கிடையாது" என்று முடிக்கிறார்.

தன் கூற்றுக்கு அவர் ஒரு எடுத்துக்காட்டையும் சொல்கின்றார். 'நான் 18 ஆண்டுகள்தான் தேனி அல்லிநகரத்தில் இருந்தேன். 60 ஆண்டுகளாகச் சென்னையில் இருக்கிறேன். அதனால் நான் சென்னைக்காரன் ஆகி விடுவேனா? நான் அல்லிநகரத்துக்காரன்தானே!' என்கிறார். தேசிய இனச் சிக்கலை இவ்வளவு மலினமாக எடை போட்டால் நாம் என்ன சொல்வது? முன்பு, பெரியார் தமிழர் இல்லை என்றார்கள். இப்போது அண்ணா, கலைஞர் யாருமே தமிழர் இல்லை என்கின்றனர். போகட்டும், ரத்தப் பரிசோதனை நிலையங்களைத் தொடர்ந்து அவர்கள் நடத்தட்டும். மரபு இனம், தேசிய இனம் குறித்த நீண்ட விவாதங்கள் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை போன்ற மிக 'எளிய' விளக்கங்கள் இன்னொரு பக்கம் தரப்படுகின்றன.

இனப் பற்று, இன உரிமை என்பன வேறு, இனவாதம் என்பது வேறு என்பதையெல்லாம் சீமானிடமிருந்து பாரதிராஜா கற்றுக்கொள்ள முடியாது. ●

## சென்னையில் பா.ஜ.க.வுக்கு எதிராக ஜக்கையன் தலைமையிலான ஆதித்தமிழர் கட்சியினர் போராட்டம்






# நாதியற்றுப் போனோம் நாம்!

**இனியன்**

இனப்பெருக்கத்திற்காக ராஜஸ்தானிலிருந்து 50 மாடுகளைத் தமிழக அரசின் சார்பில் விலைக்கு வாங்கி, இரண்டு லாரிகளில் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்த, தமிழ் நாட்டைச் சேர்ந்த, கால்நடை மருத்துவர் ஒருவர், நான்கு அரசு ஊழியர்கள் ஆகியோர், பசுப் பாதுகாப்புக் குழு என்று சொல்லிக்கொள்ளும் வன்முறைக் கூட்டத்தினரால், ராஜஸ்தானில் தாக்கப்பட்டுள்ளனர்.



பசு வதையைத் தடுக்கிறோம் என்ற பெயரில், இனப்பெருக்கத்திற்காக வாங்கி வந்த மாடுகளைத் தடுத்துக் கொண்டுபோய் உள்ளனர். ஒரு லாரியைத் தீ வைத்துக் கொளுத்த முயன்றுள்ளனர். தமிழர்களைத் தாக்கியுள்ளனர். இது குறித்து வாய் திறக்கவில்லை தமிழக அரசு.

சட்டப்படி ஆவணகளைக் காட்டி, ஜெய்சல்மர் மாவட்ட ஆட்சியரிடம் சான்றிதழையும் பெற்று வந்துள்ள தமிழக அரசு ஊழியர்கள், பால்மர் மாவட்டத்தில் இடைமறிக்கப்பட்ட வேளையில், அனைத்துச் சான்றுகளையும் காட்டியுள்ளனர். ஆனால் அந்த வன்முறைக் கும்பல், எதனையும் ஏற்கவில்லை. கண்மூடித்தனமாக அவர்களை அடித்துள்ளனர்.

மாட்டிறைச்சித் தடைச் சட்டத் திருத்தம் வந்து இரண்டு வாரங்கள் ஆகி விட்டன. இன்னமும் அந்த ஆணையைப் படித்துப் பார்க்கவில்லை என்று சொல்லும் ஒருவர்தான் தமிழ்நாட்டின் முதல்வராக இருக்கின்றார். ராஜஸ்தானில் தமிழர்கள் தாக்கப்பட்டிருக்கும் இந்த வேளையிலும் அவர் வாய் மூடி மௌனமாக உள்ளார்.

நாதியற்றுப் போனோம் நாம்! ●

## மறக்க முடியுமா?

# நாரண துரைக்கண்ணன்

எழில்.இளங்கோவன்

உ.வே.சாமிநாதரின் கையெழுத்துப் படிகள் அச்சிடுவதற்காக ஆனந்த போதினி அச்சகத்திற்கு வந்தன.

அந்தக் கையெழுத்துகளைப் படித்துப் பார்த்த அச்சகப் பொறுப்பாளர் ஜீவா, அதில் சில பிழைகளைக் கண்டு, அவைகளைத் திருத்தி அச்சுக்கு அனுப்பிவிட்டார்.

சற்றுத் தாமதமாக அப்பிழையை உணர்ந்த உ.வே.சா, தன் உதவியாளர் இராஜகோபால ஐயங்காரை அனுப்பித் திருத்தி வரச்சொன்னார். இராஜகோபால் அச்சகம் வந்தபோது, படிகள் அச்சாகி இருந்தன – குறிப்பிட்ட பிழைகள் திருத்தத்துடன்.

ஜீவாவின் தமிழறிவை வியந்த இராஜகோபால், ஜீவாவை உ.வே.சாவிடம் தமிழ் கற்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்.

**ஆனால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் என்ற சூத்திரனிடம் தமிழ் பயின்ற உ.வே.சாமிநாத ஐயர், "நான் ஒரு சூத்திரனுக்குத் தமிழ் கற்றுத்தரமாட்டேன்" என்று ஜீவாவைச் சொல்லியிருக்கிறார்.**

அந்த ஜீவாதான் நாரண துரைக்கண்ணன். ஜீவா, மைவண்ணன், வேள், துலாம், தராசு, திருமயிலைக் கவிராயர், துரை, லியோ இவைகலெல்லாம் அவரின் புனை பெயர்கள்.

அவரின் இயற்பெயர் நடராசன். அவரின் புகழ்பெற்ற நாவலான உயிரோவியத்தின் நாயகன் நடராசன், தலைவி கற்பகம். இவ்விருவரும் காதலிக்கிறார்கள். அதை அவர்கள் இறுதிவரை பகிர்ந்து கொள்ளவில்லை கற்பகத்திற்கு வேறு திருமணம் நடைபெறுகிறது. இதை இலக்கிய நயத்துடன் உயிரோட்டமாகச் சொல்வதுதான் 'உயிரோவியம்'.

இந்நாவல் நாடகமாகவும் ஆனது. இந்நாடகம் பிரான்ஸ் நாட்டில் கலை இலக்கிய இதழால் சிறந்த நாடகமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

கோணாட்சி வீழ்ச்சி – நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன் – தாசிராணி – தீண்டாதார் யார்? – காதலனா? காமுகனா? – புதுமைப்பெண் – நடுத்தெரு நாராயணன் – தரங்கினி – அரசியல் வேலைக்காரி – முத்தம்டா – பார்வதி – மேனகா – அழகாம்பிகை – தியாகத்தழும்பு – சீமான் சுயநலம் – சபலம் என நிறைய நூல்கள் எழுதியிருக்கிறார்.

ஏறத்தாழ இவரின் 150 நூல்கள் அரசுடமையாகி உள்ளன.

இவரின் இளம் வயதில் பரலி சு.நெல்லையப்பர் பரிந்துரையில் 'லோகோபகாரி' வார இதழின்



ஆசிரியரானார். 1932ஆம் ஆண்டு 'ஆனந்த போதினி' இதழின் ஆசிரியர் ஆனார். இந்த இதழில்தான் இவரின் முதல் கதையான அழகாம்பிகை வெளியானது.

1934ஆம் ஆண்டில் 'பிரசண்ட விகடன்' இதழ் ஆசிரியரானார்.

தொ.மு.சி.இரகுநாதன், ஜீவானந்தம், பாரதிதாசனார், கம்பதாசன், வாணிதாசன், சுரதா, கா.மு.செரிப், தமிழொளி, கண்ணதாசன், அகிலன், தீபம் பார்த்தசாரதி, கு.அழகிரிசாமி, வல்லிகண்ணன் ஆகியோரின் படைப்புகள் இவரின் இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

ஜீவா பதிப்பகம் என்ற இவரின் சொந்த பதிப்பில் ஏற்பட்ட இழப்பின் காரணமாக, அக்கடனை அடைக்கத் தன் சொந்த வீட்டை விற்றிருக்கிறார்.

செந்தமிழ்ச்செல்வி, திராவிடன், தமிழ்நாடு, சிந்தாமணி, தேசபந்து போன்ற இதழ்களில் இவரின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், சென்னை கம்பர் கழகச் செயலாளர், முற்போக்கு சங்க எழுத்தாளர் சங்கத் தலைவர், தென்னிந்தியப் பத்திரிக்கையாளர் பெருமன்றத் தலைவர், தமிழ்க் கவிஞர் மன்றத் தலைவர் – ஆகிய பொறுப்புகளை திறம்பட வகித்தவர் நாரண துரைக்கண்ணன்.

தந்தை பெரியார் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பியிருந்த நேரம். இவருக்குப் பத்திரிக்கையாளர் சார்பாக பெருமன்றத்தின் மூலம் வரவேற்பு அளிக்க வேண்டும் என்றார் துரைக்கண்ணன்.

பெருமன்றத்தில் எதிர்ப்பு எழுந்தது. ஆனாலும் அந்த எதிர்ப்பையும் மீறி பெரியாருக்குச் சென்னை தியாகராயர் நினைவு மன்றத்தில் சிறந்த வரவேற்பு விழாவை நடத்தினார் இவர்.

1946ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் அறிஞர் அண்ணா. இம்மாநாட்டில்தான் அண்ணாவை 'தென்னாட்டு பெர்னாட்ஷா' என்று பாராட்டினார் கல்கி கிருஷ்ணமூர்த்தி. இம்மாநாட்டை நடத்தியவர் நாரண துரைக்கண்ணன்.

தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட இவர், 1948ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாட்டுக் குழுத் தலைவராகச் செயல்பட்டுள்ளார்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசனார் குறித்து ஆய்வுக்கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசனாரின் திருக்குறள் உரையைக் கையெழுத்துப் படியிலேயே படித்த இவர், உரையின் சிறப்பு குறித்து எழுதிய ஆய்வுக்கட்டுரை 'முரசொலி' இதழில் வெளியாகியிருக்கிறது.

1939 – 45 காலகட்டங்களில் இந்திய விடுதலைக்கு ஆதரவாகவும், ஆங்கிலேய அரசுக்கு எதிராகவும் இவர் எழுதிய தலையங்கக் கட்டுரைகளால் ஆங்கிலேயர்களின் நெருக்கடிகளுக்கு ஆளானார். ஆனாலும் தொடர்ந்து எழுதினார் நெருக்கடிகளுக்கு நடுவே.

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் மரணத்தைத் தொடர்ந்து அவரின் குடும்பம் வறுமையில் ஆழ்ந்தது.

அக்குடும்பத்திற்கு உதவ முன்வந்த நாரண துரைக்கண்ணன் நிதி திரட்டினார்.

அந்நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையைப் புதுமைப்பித்தனின் மனைவி கமலா அம்மையாரிடம் கொடுத்து விட்டு, எஞ்சிய தொகையில் இராஜா அண்ணாமலைபுரத்தில் ஒரு வீடு வாங்கி அதையும் கமலா அம்மையாரிடமே ஒப்படைத்து விட்டார்.

சென்னை மயிலாப்பூரில் 1906ஆம் ஆண்டு ஆகஸ்டு 24ஆம் நாள் க.வே.நாராயணசாமி – அலமேலு அம்மையாரின் மகனாகப் பிறந்தார் நாரண துரைக்கண்ணன்.

தொடக்கத்தில் திண்ணைப்பள்ளியில் படித்தார். பின்னர் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் பயின்றார்.

சென்னை அடிசன் நிறுவனத்திலும் அச்சகங்களிலும் தொடக்கத்தில் இவர் பணியாற்றினார்.

திருவல்லிக்கேணி கெல்லட் உயர்நிலைப்பள்ளியின் ஆசிரியர் மைக்கேலிடம் ஆங்கிலம் கற்றார்.

மறைமலை அடிகளாரிடம் முறையாகத் தமிழ் பயின்றார். சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திரு.வி.கல்யாணசுந்தரனார், மயிலை சீனிவேங்கட சாமி, கா.நமச்சிவாயம், பா.வே.மாணிக்கம் ஆகியோரிடம் சிறந்த நட்பு கொண்டிருந்த இவர் 1996ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22ஆம் நாள் தன் 90ஆம் அகவையில் மரணத்தைத் தழுவினார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.